DECEMBER 2023 **U/ID 22218/UCZ2A/UCW2A/ UCY2A/UCV2A**

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer any TEN questions.

1. What do you understand by branch accounting?
கிளை கணக்கு என்றால் நீ அறிவது யாது?

2. Mention any two features of an Independent Branch.
தனிக்கிளை கணக்கின் ஏதேனும் இரண்டு தன்மைகளை தருக.

3. What are the needs of departmental accounts?
துறைவாரிக் கணக்குகளின் தேவைகள் யாவை?

4. State any four advantages of departmental accounts.
துறைவாரிக் கணக்குகளின் ஏதாவது நான்கு பயன்களைக் குறிப்பிடுக.

5. What is hire purchase price?
வாடகை கொள்முதல் விலை என்றால் என்ன?

6. Briefly explain Installment purchase system.
தவணை கொள்முதல் முறை சுருக்கமாக விளக்குக.

7. What is goodwill?
நற்பெயர் என்றால் என்ன?

8. How do you calculate deceased partner's share of profit?
ஒரு கூட்டாளி இறந்த பின் அவருடைய இலாபத்தினை எவ்வாறு கணக்கிடுவாய்?

9. What is dissolution of firm?
நிறும கலைப்பு என்றால் என்ன?

10. What is 'Realization' Account?
தீர்வு கணக்கு என்றால் என்ன?

11. What are the methods of piecemeal distribution?
படிப்படியாக பகிர்ந்தளித்தலின் வகைகள் யாவை?

12. X and Y are partners sharing profit and loss in the ratio of 3:2. They admit Z as a partner for l/5th share in further profit. Calculate new ratio.

X மற்றும் Y கூட்டாளிகளின் லாபம் அல்லது நட்ட விகிதம் முறையே 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். மேலும் Z என்ற கூட்டாளியை 1/5 பங்கிற்கு கூட்டாக சேர்ந்துகொள்ள ஒப்புக் கொண்டனர். அவர்களுடைய புதிய லாப விகிதம் காண்க.

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions.

13. Moon Ltd., opened a branch on 1.1.2021 at Chennai. The following information is supplied to you. Prepare Branch Account.

	Rs.
Goods Sent to Branch	1,00,000
Sales: Cash Rs. 40,000 and Credit Rs. 72,000	1,12,000
Cash received from Debtors	64,000
Discount allowed to them	1,200
Cash sent to branch for expenses	14,000
Stock on 31.12.2021	16,000
Debtors on 31.12.2021	6,800

மூன் நிறுவனம் 1.1.2021 அன்று சென்னையில் புதிதாக ஒரு கிளையை ஆரம்பித்தது. அதன் விவரங்கள் பின்வருமாறு : கிளை கணக்கு தயார் செய்க.

	ரூ.
கிளைக்கு அனுப்பிய சரக்கு	1,00,000
விற்பனை : ரொக்கம் ரூ.40,000 மற்றும் கடன் ரூ.72,000	1,12,000
கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம்	64,000
தள்ளுபடி பெற்றது	1,200
கிளையின் செலவுக்கு ரொக்கம் அனுப்பியது	14,000
31.12.2021ல் சரக்கிருப்பு	16,000
31.12.2021-ல் கிளை கடனாளிகள்	6,800

14. From the following, prepare departmental trading and profit and loss account for the year ended 31st December 2010, apportioning expenses on a suitable basis.

Stock on 1.1.2010	:	Dept. A = Rs.5,400 and Dept. B = Rs.4,900
Purchases	:	Dept. A = Rs.9,800 and Dept. B = Rs.7,350
Sales	:	Dept.A= Rs.16,200 and Dept.B= Rs.13,520
Closing stock	:	Dept. A= Rs.2,748 and Dept B = Rs.2,401
Wages	:	Dept A = Rs.1,340 and Dept B = Rs.240
Carriage inward	:	Rs. 469
Discount allowed	:	Rs. 441
Discount received	:	Rs. 133
Advertisement	:	Rs. 783

கீழ்க்கண்ட விபரங்களிலிருந்து துறைகளின் வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கினை 31.12.2010 ஆண்டிற்கு தயார் செய்க. செலவுகளை சரியான வகையில் பகிர்வு செய்க.

1.1.2010 அன்று : துறை அ = ரூ.5,400 மற்றும் துறை ஆ = ரூ. 4,900
சரக்கிருப்பு
கொள்முதல் : துறை அ = ரூ.9,800 மற்றும் துறை ஆ = ரூ.7,350
விற்பனை : துறை அ=ரூ.16,200 மற்றும் துறை ஆ= ரூ.13,520
இறுதி சரக்கிருப்பு : துறை அ=ரூ.2,748 மற்றும் துறை ஆ = ரூ.2,401
கூலி : துறை அ = ரூ.1,340 மற்றும் துறை ஆ = ரூ.240
உள்தூக்குக் கூலி : ரூ. 469
தள்ளுபடி அளித்தது : ரூ. 441
தள்ளுபடி பெற்றது : ரூ. 133
விளம்பரங்கள் : ரூ. 783

15. What is Partial repossession? Describe the method of dealing with such repossession of buyer and seller in such case.

பகுதி மீண்டும் கைப்பற்றப்பட்ட சரக்கு என்றால் என்ன? வாங்கியவர் மற்றும் விற்றவர் கணக்கில் மீண்டும் கைப்பற்றப்பட்ட சரக்கு எந்த முறையில் கணக்கிடப்படுகிறது?

16. Prem and Chandra share profits in the ratio of 7:3. Rama was admitted as a partner. Prem surrendered 1/10 of his share and Chandra 1/10 of his share in favour of Rama. Calculate new ratio.

7:3 என்ற இலாப பங்கில் பிரேம் மற்றும் சந்திரா என்ற இரு கூட்டாளிகள் இருந்தனர். அவர்கள் ரமா-வை புதிய கூட்டாளியாக சேர்த்தனர். பிரேம் தன்னுடைய பங்கில் 1/10-ம், சந்திரா தன்னுடைய பங்கில் 1/10-ம், ரமாவிற்கு கொடுத்தனர். புதிய விகிதத்தை கணக்கிடுக.

17. A and B share their profits and losses in the ratio of 5:3. On 1.4.2021 C was admitted and the following revaluation were made;

(a) Increase the value of building by Rs. 10,000
(b) Raise goodwill for Rs. 16,000
(c) Reduce the value of debtors by Rs. 2000

Prepare revaluation account.

A மற்றும் B இருவரும் 5:3 என்ற விகிதத்தில் லாப நட்டங்களை பிரித்துக் கொள்கின்றனர். C என்பவர் 1.4.2021ல் புதிய கூட்டாளியாக சேர்கின்றார். கீழ்க்கண்ட மறுமதிப்பீடுகள் செய்யப்பட்டது.

(அ) கட்டிடம் மதிப்பு ரூ.10,000 உயர்ந்தது.
(ஆ) நன்மதிப்பு உயர்த்தியது ரூ.16,000
(இ) கடனாளிகள் மதிப்பு குறைந்தது ரூ.2,000.

மறு மதிப்பீட்டு கணக்கை தயாரிக்கவும்.

18. How do you prepare realization account when all partners are insolvent?

அனைத்து கூட்டாளிகளும் திவால் ஆனால் தீர்வு கணக்கு எவ்வாறு தயார் செய்வாய்?

19. P, Q and R share profits in proportion of ½, ¼ and ¼. They decide to dissolve on 31.12.2015. Their Balance sheet was as follows:

Liabilities	Rs.	Assets	Rs.
Creditors	14,000	Sundry Assets	40,000
P's Capital	10,000		
Q's Capital	10,000		
R's Capital	6,000		
	40,000		40,000

The assets realized Rs. 35,500. Creditors were paid in full. Realization expenses amounted to Rs. 1,500. Close the books of the firm.

31.12.2015 அன்று நிறுவனம் கலைப்பு செய்ய தீர்மானிக்கப்படுகிறது. இருப்பு நிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. P, Q மற்றும் R-ன் இலாப நட்ட விகிதம் ½, ¼ மற்றும் ¼.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
கடனீந்தோர்	14,000	பற்பல சொத்துக்கள்	40,000
P-ன் முதல்	10,000		
Q-ன் முதல்	10,000		
R-ன் முதல்	6,000		
	40,000		40,000

ரூ.35,500-க்கு சொத்து விற்று பெறப்பட்டது. கடனீந்தோர் கணக்கு முழுவதும் கொடுக்கப்பட்டது. கலைப்பு செலவு ரூ.1,500. புத்தகத்தின் கணக்குகளை முடிக்கவும்.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. The following information relates to Trichy Branch:

	Rs.	Rs.
Stock in trade at the branch 1.1.2020		22,400
Goods sent to Madras branch		2,00,000
Cash sent to branch for the following:		
Salaries	19,200	
Rent	14,400	
Other expenses	4,400	36,000
Cash sent by the branch		3,45,200
Stock in trade at branch on 31.12.2020		15,200
Cash in hand at the branch on 31.12.2020		200

Prepare Branch account.

கீழ்கண்ட விவரங்கள் மதுரை கிளை தொடர்பானவை:

	ரூ.	ரூ.
2020 ஜனவரி 1ல் சரக்கிருப்பு		22,400
கிளைக்கு அனுப்பிய சரக்கு		2,00,000
கிளைக்கு அனுப்பிய ரொக்கம் :		
சம்பளம்	19,200	
வாடகை	14,400	
பிற செலவினங்கள்	4,400	36,000
தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிய ரொக்கம்		3,45,200
31.12.2020-ல் கிளையின் சரக்கிருப்பு		15,200
31.12.2020-ல் கிளையின் கையிருப்பு ரொக்கம்		200

கிளைக் கணக்கை தயார் செய்க.

21. The following purchases were made by a business house having three departments.

Dept. A - 200 units
Dept. B - 1,400 units } at a total cost of Rs.5,100
Dept. C - 400 units

Stocks on 1st January were:

Dept. A - 100 units
Dept. B - 400 units
Dept. C - 60 units

Sales were :

Dept. A - 180 units at Rs. 15 each
Dept. B - 1,500 units at Rs.18 each
Dept. C - 450 units at Rs.6 each

The rate of gross profit is same in each case. Prepare departmental trading account.

ஒரு வியாபார நிறுவனம் மூன்று துறைகளைக் கொண்டது. பின்வரும் கொள்முதல்களை மேற்கொண்டது.

துறை A - 200 அலகுகள்
துறை B - 1,400 அலகுகள் } மொத்த விலை ரூ.5,100
துறை C - 400 அலகுகள்

ஜனவரி 1-ல் இருப்பு பின்வருமாறு:

துறை A - 100 அலகுகள்
துறை B - 400 அலகுகள்
துறை C - 60 அலகுகள்

விற்பனை பின்வருமாறு:

துறை A - 180 அலகுகள் @ ரூ.15 வீதம்
துறை B - 1,500 அலகுகள் @ ரூ.18 வீதம்
துறை C - 450 அலகுகள் @ ரூ.6 வீதம்

மொத்த இலாப விகிதம் நிலையானது. துறை வியாபார கணக்கை தயார் செய்க.

22. Kumar purchases a car on hire purchase system. The total cash price of the car is Rs. 15,980, payable Rs. 4,000 down and in three installments of Rs. 6,000, Rs. 5,000 and Rs. 2,000 at the end of first, second and third years respectively. Interest is charged at 5% per annum. You are required to calculate interest paid by hirer, each year.

வாடகை கொள்முதல் முறையில் குமார் என்பவர் கார் ஒன்றை வாங்கினார். காரின் மொத்த ரொக்க விலை ரூ.15,980. முதலில் செலுத்திய ஒப்பந்த பணம் ரூ.4,000 மற்றும் மூன்று தவணையாக முறையே ரூ.6,000, ரூ.5,000 மற்றும் ரூ.2,000 அந்த ஆண்டின் இறுதியில் முதல், இரண்டு மற்றும் மூன்று ஆண்டுகள் செலுத்தப்பட வேண்டும். வட்டி வருடத்திற்கு 5% கணக்கிடுக. ஒவ்வொரு வருடத்திற்கும் வட்டி கணக்கிடுக.

23. Following is the Balance Sheet of X, Y and Z as at 31.12.2012

Liabilities	Rs.	Assets	Rs.
Capital A/cs.		Cash in hand	400
X	20,000	Cash at bank	10,000
Y	10,000	Debtors	12,000
Z	10,000	Stock	8,000
Reserve	6,400	Plant and machinery	12,000
Creditors	4,000	Goodwill	8,000
	50,400		50,400

Z died on 14.3.2012. Under the terms of partnership deed the executors of a deceased partner were entitled to:

(a) Amount standing to the credit of partner's capital A/c.

(b) Interest on Capital balance at 5% per annum.

(c) Share of goodwill on the basis of twice the average of the past three year's profits and

(d) Share of profit from the closing of the last financial year to the date of death on the basis of the avenge of the three completed years' profit before the death.

Profit for 2009, 2010 and 2011 were respectively Rs. 12,000; Rs. 14,000; and Rs. 16,000. Profits were shared in the ratio of capitals. Draw up Z's Account to be rendered to his executors.

X, Y மற்றும் Z-ன் 31.12.2012-ல் முடிவடையும் இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு:

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
முதல் கணக்கு		கையில் ரொக்கம்	400
X	20,000	வங்கியில் ரொக்கம்	10,000
Y	10,000	கடனாளிகள்	12,000
Z	10,000		
காப்பு	6,400	சரக்கிருப்பு	8,000
கடனீந்தோர்	4,000	இயந்திரம் மற்றும் தளவாடங்கள்	12,000
		நற்பெயர்	8,000
	50,400		50,400

14.3.2012 அன்று Z இறந்துவிட்டார். கூட்டாண்மை ஆவணச் சட்டத்தின்படி இறந்தவரின் கணக்கை வாரிசுதாரர் கணக்கிற்கு மாற்ற வேண்டும்.

(அ) கூட்டாளி முதல் கணக்கில் வரவு வைக்கவேண்டும்.

(ஆ) ஒரு வருடத்திற்கு முதல் மீதான வட்டி 5%

(இ) நற்பெயர் இரண்டு வருட கொள்முதல் சராசரியின் முந்தைய மூன்று வருட இலாபத்தில் கணக்கிடப்படுகிறது.

(ஈ) இறந்த கூட்டாளியின் இலாப பங்கு இறக்கும் வரையான முந்தைய ஆண்டின் இலாபத்தில் கணக்கிடப்படுகிறது.

முந்தைய ஆண்டுகளின் இலாபம், 2009, 2010 மற்றும் 2011 முறையே ரூ.12,000, ரூ.14,000 மற்றும் ரூ.16,000.

மேற்கண்ட விவரங்களிலிருந்து Z-ன் முதல் கணக்கு மற்றும் Z-யினுடைய வாரிசுதாரர் கணக்கையும் தயார் செய்க.

24. X, Y, Z is in partnership. The following is theft balance sheet as at 31.12. 2013 on which date, they dissolved partnership. They share profits in the ratio of 5:3:2.

Liabilities	Rs.	Assets	Rs.
Capitals:		Premises	20,000
X	25,000	Plant	15,000
Y	7,500	Stock	15,000
Z	22,500	Debtors	30,000
Creditors	20,000		
X's loan	5,000		
	80,000		80,000

It was agreed to repay the amounts due to the partners as and when the assets were realized, Viz.

	Rs.
1.2.2014	15,000
1.4.2014	36,500
1.6.2014	23,500

Prepare a statement showing how the distribution to the partners should be made.

X, Y, Z மூவரும் கூட்டாளிகள். 31.12.2013 அன்றைய தேதியின்படி இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு: அவர் இலாப நட்டத்தை 5:3:2 என பகிர்ந்தனர்.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
மூலதனம்:		வளாகம்	20,000
X	25,000	பொறிவகை	15,000
Y	7,500	சரக்கிருப்பு	15,000
Z	22,500	கடனாளிகள்	30,000
கடனீந்தோர்கள்	20,000		
X-ன் கடன்	5,000		
	80,000		80,000

இந்நிறுவனம் கலைக்கப்பட்டது. சொத்துக்கள் விற்று பெறப்பட்டது.

	ரூ.
1.2.2014	15,000
1.4.2014	36,500
1.6.2014	23,500

பகிர்வு வழங்கல் பட்டியலை தயாரிக்க.

———————